(**Chapter XXIII code of Criminal Procedure Code**)
**IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT**, **COIMBATORE**.

18.11.2020

**CC No**.38/2018

**அசா1 பவித்ரா**

**எதிரி ஆஜர், சாட்சி ஆஜர் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.**

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

இந்த வழக்கில் எதிரிகளுடன் சமாதானமாக செல்ல முடிவு செய்துள்ளேன் என்றால் ஆமாம். வழக்கு தொடர்ந்தபோது இருந்த மனநிலையில் நான் புகார் அளித்தேன் என்றால் ஆமாம். தற்போது எதிரி மீது எந்த நடவடிக்கையும் எடுக்க வேண்டாம் என்றால் சரிதான். முதல் விசாரணையிலும் குறுக்கு விசாரணையிலும் நான்சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் சொல்லிக்கொடுத்து நான் சொன்னேன் என்றால் சரிதான்.

சாட்சியை பிறள் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி வேண்டு அதன் பேரில் அனுமதி வழங்கப்பப்பட்டது.

அரசு தரப்பு குறுக்கு விசாரணை

கடந்த 2015 ம் ஆண்டு கல்லூரியில் படிக்கும்போது ஆஜர் எதிரியுடன் பழக்கம் ஏற்பட்டதாகவும் ஆஜர் எதிரிக்கு தாய் தந்தையர் இல்லை என்றும் சொல்லி அனுதாபத்தின் பேரில் அவரை காதலித்ததாகவும் பின்னிட்டு எதிரி வேலை செய்த ஹோட்டலில் ஒன்றாக தங்கி இருந்தபோது கர்பமானதாகவும் எனவே வீட்டிற்கு தெரியாமல் 12.10.2015 ம் தேதி மருதமலையில் திருமணம் செய்து கொண்டதாகவும், அதன் பிறகு பெற்றோர்களிடம் தகவல் தெரிவித்ததாகவும், அஜர் எதிரியை தனது வீட்டில் ஏற்றுக்கொண்டு வரவேற்பு வைத்ததாகவும், ஆஜர் எதிரிக்கு அடையாள அட்டைகள் எதுவும் இல்லாததால் பெற்றோர்களே அதனை தயார் செய்து கொடுத்ததாகவும், ஹோட்டல் ஆரம்பிப்பதற்காக சுண்ணாம்பு கால்வாய் என்ற இடத்தில் தன்னுடைய தகப்பனார் ஆஜர் எதிரிக்கு வைத்துக்கொடுத்ததாகவும், தன்னுடைய நெஞ்சில் தாரா என்றும் கையில் ஜெர்ரி என்றும் பச்சை குத்தி வைத்திருந்த எதிரியை பார்த்து கேட்ட

பொழுது தன்னுடைய தாய் மற்றும் தந்தை பெயர் என்று சொன்னதாகவும், பிறகு ஒருநாள் ஆஜர் எதிரியின் பாஜ்போட்டை பார்க்கும்பொழுது அதில் இணையின் பெயர் தாரா என்று இருந்ததாகவும், அது பற்றி கேட்டதற்கு யாரிடமும் சொல்ல வேண்டாம் என்று சொன்னதால் சொல்லவில்லை என்றும் தான் இரண்டாம் முறை கர்பமான பிறகு தாய் தந்தையர் வீட்டில் அனுப்பி வைத்ததாகவும் பல மனம் உழைச்சலுக்கு ஆளாக்கி இருந்ததற்கு தனது அப்பா மாமா ஆகியோர்கள் வீட்டை வந்து பார்த்த போது வீட்டில் பல்வேறு அசல் ஆவணங்கள் கிடைத்ததாகவும், அப்பொழுது ஆஜர் எதிரிக்கு ஏற்கனவே திருமணமாகி இருந்த விஷயம் தெரிய வந்ததாகவும், ஆஜர் எதிரி தன்னை ஏமாற்றியது தெரிந்து போலீசில் புகார் கொடுத்துவிட்டு மேற்கண்ட சங்கதிகளை போலீசார் விசாரணையிலும் நீதிமன்ற முதல் விசாரணையிலும் சில சங்கதிகளையும் குறுக்கு விசாரணையிலும் தெரிவித்து விட்டு தற்போது எதிரியுடன் சமாதானம் செய்து கொண்டு எதிரியை இவ்வழக்கில் இருந்து காப்பாற்ற வேண்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.